அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:66/2016
தேதி :07.04.2016

# ஏப்ரல் 9 ஆம் தேதி தூத்துக்குடியில் மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் - தொடர்ந்து திருச்செந்தூரில் தேர்தல் பிரச்சாரம் தொடக்கம் சமக நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

*அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் அனைத்து மாநில நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தொகுதிச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வரும் 09.04.2016 சனிக்கிழமை காலை 9 மணியளவில் தூத்துக்குடி SRM ஹோட்டலில் நடைபெற உள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைப் பொதுத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் அதிமுக கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வதற்கான தேர்தல் களப்பணிகள், தலைவர் அவர்களின் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண திட்டங்கள், தலைமை மற்றும் மாவட்ட தேர்தல் பணிக்குழுக்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.*

*இதைத் தொடர்ந்து காலை 11 மணியளவில் தலைவர் ஆர்.சரத்குமார் அவர்கள் போட்டியிடும் திருச்செந்தூர் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் தொடங்கப்பட உள்ளது. இவ்விரு நிகழ்வுகளிலும் அனைத்து மாநில நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தொகுதிச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*நன்றி, வணக்கம்*
*உழைப்பவரே உயர்ந்தவர்*
*என்றும் அன்புடன்*

*ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ*
*தலைவர்*